பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 10 2023 **TUESDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு அதிக அளவில் வங்கிக்கடனுதவி வழங்கப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான விழிப்புணர்வை அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வனத்துறை அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில், மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் பருல் சௌத்ரி தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ----

**<<<<<>>>>>**

நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் ஜெக்தல்பூரில் 27 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பேசிய பிரதமர், கடந்த ஒன்பது ஆண்டுகளில் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ஆறு மடங்கு அதிகரிக்கப்பட்டு, தற்போது இது 10 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

நாட்டின் ஒவ்வொரு மாநிலமும், மாவட்டமும், கிராமங்களும் முன்னேறினால்தான் வளர்ச்சி பெற்ற இந்தியாவை நனவாக்க முடியும் என்றும் பிரதமர் கூறினார்.

பூகோள கட்டமைப்பு, மின்னணு கட்டமைப்பு, சமூக கட்டமைப்பு ஆகிய மூன்றும் வளர்ச்சிபெற்றால்தான் நாட்டின் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்ய இயலும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் எஃகு உற்பத்தியில் தற்சார்பு நிலையை எட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் நாகர்நரில் உள்ள தேசிய கனிம வளர்ச்சி கழகத்தில் 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பசுமை எஃகு உற்பத்தி தொழிற்சாலையையும் பிரதமர் திறந்துவைத்தார்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் எஃகு, பல்வேறு தொழிற்சாலைகளுக்கு பயன்படுவதோடு, ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

ஜெகதல்பூர் ரயில் நிலையத்தில் **Antagarh – Taroki** இடையேயான புதிய ரயில் தடம் மற்றும் **Jagdalpur - Dantewada** இடையே இருவழி ரயில் தடத்தையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

தரோக்கி – ராய்பூர் இடையிலான ரயில் சேவையையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய திரு நரேந்திர மோடி, ஏழை-எளிய மற்றும் பின்தங்கிய மக்களின் நலனுக்காக மத்திய அரசு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இப்பகுதியின் வளர்ச்சிக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

முன்னோடி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் அனைத்து உதவிகளையும் செய்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கோவையில், இன்று 3 ஆயிரத்து 479 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக்கடனுதவியை சுமார் 90 ஆயிரம் பேருக்கு வழங்கி பேசிய நிதியமைச்சர், சிறு- குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு வங்கிகள் மூலம் தாராளமாக கடனுதவி வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கு வங்கி கடன் திட்டங்கள், அரசின் மானிய உதவிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியையும் அரசு மேற்கொண்டுவருவதாக திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

*(சவுண்ட் பைட் - நிர்மலா — 53 செகண்ட்ஸ்)*

**Cess** தீர்வையின் மூலம் கிடைக்கும் வருவாயை மத்திய அரசு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கி வருவதாகவும், இதனால் நாடு முழுவதிலும் உள்ள எளிய மக்களும் பயன்பெற்று வருவதாகவும் நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

மாநில அரசுகளுடன், மத்திய அரசு பகிர்ந்துகொள்ளும் செஸ் வருவாய் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுவதாக தெரிவித்தார்.

கோவை மாநகரில் இந்திய சிறுதொழில்கள் மேம்பாட்டு வங்கியின் புதிய கிளையை திறந்துவைத்த நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், தூய்மை இந்தியா விழிப்புணர்வு சேவா நிகழ்ச்சியிலும் பங்கேற்றார்.

<<<<<>>>>>

பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வன அதிகாரிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வனத்துறை அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டில் இருந்து விடுபடுவது குறித்த விழிப்புணர்வை பள்ளி மாணவர்கள் மற்றும் சுயஉதவி குழுக்கள் என அனைத்து பிரிவினரையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில், பிளாஸ்டிக் அல்லாத பொருட்களை பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - முதலமைச்சர் - 23 செகண்ட்ஸ்)*

வன உரிமை சட்டத்தின்கீழ், தகுதியுடைய மலைவாழ் மக்களுக்கும், பழங்குடியினருக்கும் அனுபவ உரிமை சான்றுகளை விரைந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கடலோர பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், கடல் அரிப்பை தடுக்கவும் உரிய வழிமுறைகளை செயல்படுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

வன விலங்குகள் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாத்திட வேண்டும் என்றும், வன விலங்குகளால் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை காலதாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பசுமை தமிழ்நாடு இயக்கம் மூலம், 18 வகையான சங்ககால மர வகைகளை 14 லட்சத்திற்கும் மேல் பொதுமக்களின் பங்கேற்போடு நடப்பட்டுள்ளது என்றும், அவற்றை நல்ல முறையில் வளர்க்க வனத்துறையினர் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

**<<<<<>>>>>**

இவ்வாண்டு ஜுன், ஜூலை மாதங்களில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு துணை தேர்வு எழுதியவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களை நாளை மறுநாள் முதல், தேர்வு எழுதிய மையங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம் என அரசு தேர்வுகள் துறை இயக்ககம் அறிவித்துள்ளது.

கூடுதல் விவரங்கள் **dge.tn** என்ற அரசின் இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>**

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளின் ஓரிரு இடங்களில் லேசானது முதல், மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு சூறாவளி காற்று வீசக்கூடும் என்றும், சில நேரங்களில் மணிக்கு 65 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும், நாளையும் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு ஊக்கத்தொகையுடன் கூடிய **FINE** எனப்படும் ஆறுவார கால செவிலியர் பயிற்சி பெற தாட்கோ இணையதளத்தில் பதவி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வரும் 7-ஆம் தேதி மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

கொடைக்கானல் பேரிஜம் ஏரியில் இயக்கப்பட்ட பரிசல் சவாரி தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

<<<<<>>>>>

தூத்துக்குடியில் விசைப்படகு மீனவர்கள் நாளை மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என மீன்வளத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவின் **Hangzhou**-வில் நடைபெற்று வரும் போட்டியில், மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் பருல் சௌத்ரி தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

ஆடவர் 800 மீட்டர் ஓட்டத்தில் **Mohammed Afsal** வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

மகளிர் 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் தமிழக வீராங்கனை வித்யா ராம்ராஜ் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

**Triple Jump** பிரிவில் பிரவீன் சித்ரவேல் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் போட்டியில், தீபிகா பல்லிக்கல் - ஹரீந்தர் பால் சிங் சாந்து இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் சௌரவ் கோஷல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இந்தியா, இதுவரை 14 தங்கம், 25 வெள்ளி, 27 வெண்கலம் உட்பட மொத்தம் 66 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் தொடர்ந்து 4வது இடத்தில் உள்ளது.

**<<<<END>>>>**